965

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

இவை

ம-ா-ா-ஸ்ரீ, அயனம்பாக்கம்

ச. முருகேச முதலியாராலியற்றிய

ஆஞ்சநேயர் கீர்த்தனை.

அ. இரங்கசாமிமுதலியார் சன்ஸ்

சென்னை:

...விலாச அச்சுக்கூடத்தில்

...கப்பட்டது.

...25.

...சாயப்பிள்ளை வீதி.

Q29:417
N125
180425

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஆஞ்சநேயர் கீர்த்தனை.

இவை

ம-ள-ள-ஸ்ரீ, அயனம்பாக்கம்

ச. முருகேச முதலியாரால்

இயற்றியது.

சென்னை

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1925.

180425

ஆஞ்சநேய குருவேநம:

சாற்றுக்கவி.

பிரபன்னவித்வான் கோ. பள்ளிகொண்டாபிள்ளை
அவர்கள் மாணாக்கரும்
மஹாவித்வான் பென்னலூர்
நாராயணசாமி நாயுடவர்கள் புத்திரருமாகிய
ம-௱-௱-ஸ்ரீ,
நாதமுனிநாயுடவர்களா லியற்றிய
அறுசீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்.

விழுந்துபசிகொண்டிருக்க வுண்ணாத வேளாளர்
வியன் குலத்தான், பொருந்துபுக ழயனம்பாக்கைச்
சபாபதிக்குரிசில் புண்ணியத்தால், திருந்துமெழில்
மீனாட்சிபாலளித்த முருகேசச்செம்மல்மண்ணால், ப
ருந்து நிழலும்போலப் புனைந்தவரி கீர்த்தனத்தைப்
பாரீர்பாரீர்.

அவையடக்கம்.

கட்டளைக்கலித்துறை.

கன்னாவலர்களிரும்பையு நன்குநயந்துகரும்
பொன்னாமெனப்புகல் வாரதுபோலிப்புலமையிலெந்
புன்னாவினாற்புனையுங் கீர்த்தனத்துட்புகரகற்றி
இந்நாளிலாதரிப்பாரென்றன்னாரையிறைஞ்சினனே.

முடுகு விருத்தம்.

கல்விப்பொருள்தனை கசடாகற்றுணர்கவி வல்
லோரைநிதம், நல்லறிவோடுநயந்துமைகேட்பது நார
ணன்றுள்பாட, புல்லறிவாளன் புனைந்திடுங் கீர்த்தனம்
பிழைகளை தான்பொருத்து, தொல்லுலகில் துணையாக
விருக்கத்துதித்தனன் பெரியோரே.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஆஞ்சநேயர் கீர்த்தனை.

நம்மாழ்வார்காப்பு.

நேரிசை வெண்பா.

கருணைபுரிவான் களபமழைத்த
கருணமளித்தான் தனிப்பொற்-கிரண
உடையனங்கையாழியாற்கோதுகீர்த்தனத்துக்
குடையநங்கை மைந்தனுவந்து.

ஸ்ரீசாரதாம்பாள் தோத்திரம்.

கலித்துறை.

கல்விக் கதிபதியானவளே கடைக்கண்ணளிப்பாய் செல்வியுனை த்தினம்சிந்தையிலே மதிச்செபிக்குமென்றன், வல்வினைபோட்டி நன்னுவிலிருந்தருள்வாக்களிக்கப், பல்வகையாலுனைபுகழ்பாடித் தோத்திரம் பண்ணுவனே.

கரிக்கினில் வளர்ந்தோங்கும் ஏகாம்பரியே
என்னும் வர்னமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

அம்பாசாரதாம்பா அடைக்கலந்தாயே (ஓஅம்பா)

அநுபல்லவி.

கம்பன்போற்றும்வேணி காளியனேற்றும்வாணி
வளைக்கந்தரியே சுந்தரியே வந்தாதரியே (ஓஅம்பா)

சரணங்கள்.

அன்னையேவந்துநீ ஆதரிதொண்டனை - அம்மா
அஞ்சலிசெய்தேனே அபயமீதோநானே
தஞ்சமெனகெஞ்சினனேவஞ்சிவருவையே (ஓஅம்)

தண்டைகள்மின்னிட தாவினோர்கண்டிட - அம்மா
வெண்டாமறையாளே வெண்மைத்துகிலாளே
விற்பனியே எப்பொழுதென்நாவில்நிற்பையே (ஓ)

வேதன்மனைவியே வேதாந்தரூபியே உன்
பாதம்பணிந்தேனே பாலிப்பாயேசெந்தேனே
பத்தன்முருகேசன் தொழும்சத்தியவதியே. (ஓ)

ஆஞ்சநேயர் வணக்கம் வெண்பா.

செந்தாமரைக்கண்ணன் சேவடியைநான்துதிக்க
வந்தாதரிக்கருணை மாருதியே சொந்தமதாய்
சிந்தைதனிலிருக்கச் சீர்பாதம்போற்றிசெய்தே
வந்தனமுந்தந்தேன் மகிழ்ந்து.

விருத்தம்.

ஹரிமலர்பாதம்போற்றும் வனுமந்தகுருவேஜயா
கரியமால்பஜனைபாட கருத்தினிலிருப்பாய்துய்யா
நெரிபிசகாமலென்முன்நிகழ்த்துவாய்வடியர்மெய்யா
சிறியனைக்காக்கவாவா ஸ்ரீராமதூதாபோற்றி.

இதுவுமது.

ஆஞ்சியவாக்கிமாருக் கபயமுன்றந்தாய்போற்றி வெஞ்சிலை விசயன்தேர்மேல் வீற்றிருந் தருள்வாய் போற்றி, நெஞ்சினில்நினைப்பார்க்கென்று நிற்பயமளிப்பாய்போற்றி, அஞ்சலென்றடைந்தேன்தேவ அநுமனே போற்றிபோற்றி.

தில்லைநடராஜனேவாரும் என்னும் வர்னமெட்டு.

இராகம்-சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி.

வாயுசேனனேவாரும் வரந்தாருமே
வாயுசேனனேவாருமே

அநுபல்லவி.

ஓய்வில்லாமலேஓடினேன் ஓடிவந்தெனைகாக்க
ஓ-ஓ-ஸ்ரீராமதூதனே ஓ-அநுமந்தனே (வாயு)

சரணங்கள்.

இலங்கணிசங்காரா இங்கேவருவாய்தீரா
கலங்குதேஎந்தனெஞ்சமும் சஞ்சீவிராயா (வாயு)

ஐயன்ரங்கராமன்பாதா அடிமையெனைக்காக்கவாதா
வெய்யவனைக்கனியாய்பறித்தவாசஞ்சீவிராயா (வா)

நித்தியபிர்மச்சாரியா நித்தியகிரந்தராவா
சத்தியமாய்பணிந்தேன்யானுமேமுருகேசன்தினமே.

இராகம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

என்மொழிகேளாய் அநுமந்தா எதிரில்வந்தாளாய்

அநுபல்லவி.

உன்னிருபாதம் என்னிருகண்காண
தன்மையாய்நீவர நன்மையாய்கோரினேன் (எ)

சரணங்கள்.

ஓங்கியரூபம் உந்தன்சொரூபம்
சாங்கோப சாங்கமோ சாமி ஆஞ்சநேயா (என்)

தஞ்சம்தஞ்சம்நானே அஞ்சனைபுத்திரனே
கெஞ்சினனேயெனை வஞ்சனைசெய்யாதே (என்)
நாராயணன் தூதா நாவில்தினம்நிற்க
பாராயணஞ்செய்தேன் பாலன்முருகேசன் (என்)

சரிக்கினில்வளர்ந்தோங்கும் யென்னும்வர்னமெட்டு.

இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆஞ்சநேயா அருள்பெற்ற ஐயாசஞ்சீவியே (ஆஞ்)

அநுபல்லவி.

அஞ்சனையருள்பாலா அரக்கர்குலகாலா
வஞ்சனைசெய்வாலிதனை பஞ்னசயாக்கினாய் (ஆ)

சரணங்கள்.

ஆழியைத்தாண்டியே அம்மனைவேண்டியே
திருவாழிதனைத்தந்து திருமாதினையுவந்து
அன்புதரதென்பாய்நீயே கம்பமேறினாய் (ஆஞ்)

வெகுகோடிராக்ஷதர் மிகுசிலைகொண்டுநேர்
பிகுவாயுனைத்தேட லகுவாகவேநாட
ஓங்கினாய்ரகுராம நாமமேகதியென்று (ஆஞ்)

லங்கைக்கரசனை பங்கப்படுத்தினாய்
செங்கரத்தாலெத்தி சங்கமேந்தியைநத்தி
சிங்கநாதஞ்செய்து தீரமாய்தீயைமாட்டினாய் (ஆ)

உன்னடிபோற்றினேன் உன்கவியேற்றினேன்
என்முகம்பாரையா நானேழையிதுபொய்யா
நன்மைபெறநத்தினனேபத்தன்முருகேசன் (ஆஞ்)

ஆஞ்சநேயர் கீர்த்தனை.

இ-ம்-வசந்தம்-தாளம்-ரூபகம்

பல்லவி.

தாண்டவம்புரிந்தான் என் ஆண்டவன்
அநுமந்ததேவன் தாண்டவம்புரிந்தான்

அநுபல்லவி.

இந்திரஜெயித்தன்செய்யும்
மந்திரங்கம்பலையதனை
தந்திரமாய்தான்கலைத்து
எந்தைராமாராமவென (தாண்டவம்)

சரணங்கள்.

கோணைநாமந் துலங்க துலங்க
கோதண்டன்பெயர் விளங்க விளங்க
சேனைகள்மனங் கலங்க கலங்க
சேர்ந்துவானரர் குலுங்க குலுங்க

அந்தரவாசிகள்பார்க்க
அரக்கர்களைநாசமாக்க
வந்தனம்செய்தோரைக்காக்க
வாதுகள்செய்தோரைப்போக்க (தாண்ட)

கவசகுண்டலமாட ஆடகைதனிற்
புடை போட போட
துவசமெல்லாம் அறுந்துவாட
துரைகள்யாரும் அதிர்ந்துஓட

தோகைபாகன் களிகூட
நாகந்தலையசைந்து வாட
யாகந்தனில் அரக்கர்வாட
பாகங்களெல்லாமேயோட (தாண்ட)

மாதவனை பாடியாடி மனதின்படியை நாடிநாடி
சீதரனைக் கூடிகூடி ஜித்தன்மனம் வாடி வாடி

ஏதடாநீயினிவேழ்வி
சூதடாசெய்யவோபோராய்
ஓதடாஓஓபேயா
உன்சிரம்நொடிதனில்விழுதெனை (தாண்ட)

நேசன் அயன்றைமேவும்
வாசன் நின்னடியைபோற்றும்பாசன்
வாசமாக இருக்கநாவில்
வரந்தருள்வாய் மாருதியென

ஆசபாசமாகநண்ணி
அன்பன்தனைகாககவெண்ணி
தாசன்முருகேசனைச்சதம்
பாசமதாய்காப்பேனென (தாண்ட)

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

பல்லவி.

அக்ஷயம்தருவாயே அநுமந்தா
இக்ஷணம் வருவாயே

அநுபல்லவி.

பக்ஷம்வைத்து இதோ நிச்சயமாய்பூசித்தேன்
தக்ஷணம்வந்துஎனை ரக்ஷிக்கவேணுமையா (அ)

சரணங்கள்.

இஷ்டதேவதையேயென் கஷ்டத்தைநீக்கிவிடுவாய்
அஷ்டஐஸ்வரியமும் நிஷ்டையும்விளங்கவே (அ)

துளபவிதழெடுத்து தொழுதேனேமாருதியே
களபமதனைக்கொண்டு கழலிணைபோற்றினனே (அ)

சித்திதருந்தருவே முத்திதருங்குருவே
பத்தன்முருகேசன்றன் சித்தம்குளிர்ந்திடவே (அ)

விஷ்ணு வணக்கம்.

அகிலகாரணனேபோற்றி யனுதரட்சகனேபோற்றி
முகிநிறமானைப்போற்றி முகுந்தனேமுதல்வாபோற்றி
செகமதையளந்தாய்போற்றி திருமகணாதாபோற்றி
இகபரமானதேவ வேதகாரணனேபோற்றி

இராகம்-நீலாம்புரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அவதாரம்செய்தானே வைகுந்தன்
அயோத்திதன்னில் (அவ)

அநுபல்லவி.

பகவன்மங்கள் தம்மைப்போக்க
பகவான்ஸ்ரீ ரகு ராமனாக (அவ)

சரணங்கள்.

தசரதர்குலம்செழிக்கவந்தவனும் ஸ்ரீராமச்சந்திரன்
தாசர்கள்மனம்களிக்க வந்தவனும்

பாசமாய்மாதர்மங்களம்பாட பத்தர்முத்தர்சித்தராட
தாழ்சடைதவமுனிவரோத தாமோதரன்ஸ்ரீராமனாக

ராவணன்முடிசாய்க்கவந்தவனும் ஸ்ரீரங்கதாமன்
ராக்கதர் வேரறக்க வந்தவனும்

அனகர்சுகர்சனகர்போற்ற ஆத்ரேயரோமாபதரேற்ற
ஜனகர்போகர்கொங்கணர்தொழ சாரங்கன் சீதாராம
னுக (அவ)

பரதனுக்குதமையனுய்ப்பிறந்தான் ஸ்ரீராமச்சந்திரன்
பரதம்போல் மேனியாய்வந்தான்

திரைகடலில்வாசஞ்செய்வோன் தீநதயாளமுன்ளோ
ன், குறைகள்யாவுந்தீர்க்கவந்தோன்ஸ்ரீராமனுக (அ)

கோசலைமனமகிழவந்தவனும் ஸ்ரீராமச்சந்திரன்
கோதண்டம் கையிலேந்தவந்தவனும்

தேசமன்னர்கள்தீதைநீக்கதேடுங்கவிஞர்ஆவல்தீர்க்க
நேசமாய்முருகேசன்துதிக்க நித்தியனும்ஸ்ரீராமனுக

இந்துஸ்தானி-தில்லானு-ரூபகம்.

திருவரங்கநாதனே திவ்வியதேஜோமயனே
கரியவனைக்காத்தவனே கண்ணுமணிவண்ணுவா
தருணம்ஐயா தருணம்இது தருணம்கருணை தாசாணம்

மாதவாகேசவனே மாயவாகோவிந்தனே
கோதையைமுன்காத்தவனேசுன்றதனையேற்றவனே
தருணம்ஐயா தருணம் இது தருணம்கருணை தாசரணம்

துளபமணிந்தவனே சுத்தநிராமயனே
களபகஸ்தூரியனே கஞ்சனைமுன்வென்றவனே
தருணம் ஐயா தருணம்இது தருணம்கருணை தாசரணம்

பூதகிபாலுண்டவனே பூமிபாரம்விண்டவனே
சாத்தகிமுன்வந்தவனே சத்தியபாமாநாயகனே
தருணம்ஐயா தருணம்இது தருணம்கருணை தாசாணம்

இந்துஸ்தானிமெட்டு-ஏகதாளம்.

பச்சைவண்ணமேனியனே ராமா பூமா
நச்சரவில்பள்ளிகொள்ளும் நமோநாராயணா
தேவா நீவா சிறியனைக்காவா

மச்சமானரூபனே ஓ மாயாநேயா
இச்சையா இரட்சித்தருள் இராக்கதநாசா
ஈசா நேசா என்னிருதயவாசா

ஜானகிரமணனேராம சுந்ரா சுந்ரா
வானவர்கோன்வணங்குந்தாளா வையமுண்டவா
வாராய் நேராய் வல்வினை தீராய்

நித்தியப்ரகாசனே வேணுநாதா கீதா
பத்தன்முருகேசன்மீதி லித்தனைவாதா
கியாதாநீதா கிருபைபார்விநோதா

கண்ணிகள்-ரூபகம்-இந்துஸ்தானி.

ஓம்நமோ நாராயணா வென்னும் மந்திரம்
திருமந்திரம் வெகு சுந்திரம்

உலகமுண்டவாய னிவனொருவனே
மதிதருவனே கதிதருவனே

உலகளந்தபாத னிவனொருவனே
புவியிலொருவனே தெய்வமொருவனே

ஆனைகாத்த ஆதிமூலதேவனே
பிரபோதனே திருநாதனே

வேதகீதநாதந் தொழுமிவனையே
மாதவனையே சீதரனையே

சங்கமேந்தும் ரங்கநாதனொருவனே
அறிகுவாய் மனந்தெரிகுவாய்
சிங்கரூபங் கொண்டதேவனொருவனே
தினம்போற்றுவாய் மனந்தேற்றுவாய்
தாசன்முருகேசன் போற்றுமிவனையே
இதுநித்தியமே கனசத்தியமே

இந்துமுகிவானிகிமன வென்றவர்ணமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கரிவரதராஜாஉம்மைக் கனவிலுமறவேன்தினம்
நினைவிலுமறவேன் தினம்நினை தினம்நினை (கரி)

அநுபல்லவி.

அரிஅரியென்றழைக்க துருவன்ஆதரித்தாயே
முரஹரிமுகுந்தாவென்ற முநியைக்காத்தவாதிரு
காஞ்சிவாழ்பவாதிரு காஞ்சிதிருகாஞ்சி (கரி)

சரணங்கள்.

அண்டமுண்டவாயாவென அழைக்க அம்பரீஷன்
ஜெகமண்டலங்கள்போற்றும் சக்ரமேவவில்லையாரிஷி
மேல், ஏவவில்லையாநீரேவ நீரேவவில்லையா (கரி)

அச்சுதா அனந்தசயன ஆபத்பாந்தவாவென்
றனுமனழைக்கவாலிதனை மாய்த்தவுபாயாபெருந்
தேவிசமேதாபெருந் தேவிபெருந்தேவி (கரி)

அந்தனேபரிசுத்தனேயென் கர்த்தனேவருவாயன்று
பந்தன்பிரகலாதன்போற்ற சித்தமிரங்கினாய்நரசிங்க
ரூபனாய்நரசிங்க நரசிங்கரூபனாய் (கரி)

பாற்கடலில்பள்ளிகொள்ளும் பத்மநாபனேவந்து
காக்கமுருகேசன்பணிந்தேன் கமலக்கையனேஎனைக்
காருமெய்யனே எனைக்காரும்எனைக்காரும் (கரி)

இராகம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

நாராயணாவென்றோது நமன்நாடான்தொடான்
நாராயணாவென்றோது

அநுபல்லவி.

அட்டாக்ஷரப்பொருளே அனுதினம்போற்றுவோர்க்
கு அளிக்கும்நிச்சயமேமுத்தி அதிசீக்கிரமாகவே
அளிக்கும்நிச்சயமேசித்தி நாராயணாவென்றோது

சரணங்கள்.

எட்டெழுந்தினைவிட்டு கெட்டுஅலைந்தவர்க்கு
கிட்டுமேபெருங்கத்தி காலன்தூதர்கையாலே
வாட்டிப்போடுவார்கெட்டி ஆகையால்நெஞ்சே (நா)

காரகநாமத்தை ஸ்மரியாமலிருப்போர்க்கு
தான்கிடைக்குமேமன்வெட்டி பெருங்கழுவிலேற்றவே
நெட்டிதள்ளுவார்மட்டி ஆகையால்நெஞ்சே (நா)

கோகுலவாசனை கோராமலிருப்போர்க்கு [லே
கோடாலிகொண்டேயடிப்பார் கண்டன்தூதர்கையா
போடாவாடாவென்றடிப்பார் ஆகையால்நெஞ்சே(நா)

லட்சுமிவாசனை நாடாமலிருப்போர்க்கு
சற்குருதானுமுண்டோ திருவக்ஷரமோதிட
சற்குருதானுமுண்டோ ஆகையால்நெஞ்சே (நா)

தாசன்முருகேசன்சொல் தாவிமனதுட்கொண்டால்
ஈசனடம்புரிவான் இருதயந்தனிலேஜெக
தீசனடனம்புரிவான் ஆகையால்நெஞ்சே (நா)

இந்துஸ்தானி-காபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

நாராயணனைநாடுவோர்க்கு நரகமேதுகாண்
காமவிரகமேதுகாண்

அரியைத்தினம் ஓதுவோர்க்கு
அருளும்வேருண்டோ பரம்பொருளும்வேறுண்டோ

ராமனைத்தினம் பாடுவோர்க்கு
நாதன்வேறுண்டோபிரயோதனன்வேறுண்டோ

மச்சகூர்மனை மதித்தபேர்க்கு
இச்சைவேறுண்டோபிரயோதனன்வேறுண்டோ

ராகவன்பாதம் நத்தினவர்க்கு
முத்திவேறுண்டோ பரசித்திவேறுண்டோ

வேங்கிடத்தானை வேண்டுவோர்க்கு
தாண்டவம்புரிவான் நமதாண்டவன்வருவான்

பிரமன்தந்தையை நிதமுந்தொழுதால்
சதமும்வருவனே நல்ல இதமுந்தருவனே

பாகவதர்கள் பதம்நீதொழுதால்
பார்ப்பான்நிச்சயமே அவன்சத்தியமே

தாசன்முருகேசன்கவியை சார்ந்துகொள்வையே
மனதில்தேர்ந்து கொள்வையே

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

அடைக்கலம்புகுந்தேன்ராகவா அடியேனான்றன்
அடைக்கலம்புகுந்தேன்ராகவா

அநுபல்லவி.

அடைக்கலம்புகுந்தேனே ஆதரிப்பாய்செந்தேனே
கடைக்கண்ணருள்சொன்னேனே காணவிரும்பினே
[னே

சரணங்கள்.

மாயாநித்தபூமி மதிக்குந்தாரகநாமி
தாயாவெனைக்காநேமி தாமோதராவென்சாமி
சுகமாய்கனகவல்லி தோளைப்பொருந்தப்புல்லி
மகிழுங்கோதண்டவல்லி வந்தேன்துயரைசொல்லி

வென்மணவாளனே பொன்மலைத்தோளனே
மின்மலர்த்தாளனே மிளிர்வடிவாளனே
பன்றிமெய்யுடுத்தோனே பாரினையெடுத்தோனே
கன்றின்பின்னடுத்தோனே கழையிசைபிடித்தோனே

தனவிலுருவமைந்து கவலைபட்டேனொந்து
குருவேயெனக்கிசைந்து கூக்குரல்கேட்பாய்வந்து
திருவேதெய்வமேநாடி தினமேதுதித்தேன்பாடி [டி
அருவேயழைத்தேன்வாடி அயனறைமுருகேசன்தே

இராகம்-கமாஸ்-ஆதிதாளம்.

பல்லவி.

ஆடியபாதமே ஐயன் ஆயன்பாதமே

அநுபல்லவி.

அம்மடுவில்காளிங்கன் முடிநடுவில்
திருநடனமாடிய பாதமே

சரணங்கள்.

அண்டங்கிடுகிடென ஆரந்தளதளென்ன
கண்டஅயர்கள்பன்ன கானக்குழையுமின்ன
சண்டன்பயந்தேயோட சர்ப்பமயர்ந்துவாட
தொண்டர்துதித்தேயோட தூயவர்கள்கொண்டாட

தாம்ஜெணுத்தஜெணு தீம்தரிகிடதத
தத்தாதரிகிடஜேம் தித்தாதிரிகுணஜேம்
தத்தோம்தத்தோமென தித்தோம்தித்தோமென
கன்றுமூர்ச்சையடைந்து காளைதிகிலடைந்து

நின்றுமனமயர்ந்து நேசர்நெஞ்சங்கள்வந்து
தன்றிதனையேயெண்ணி தாவியசோதைகுண்ணி
ஒன்றுமில்லையென்றுண்ணி ஓதிகிருஷ்ணனைபன்னி
திம்திரித்தரி தாம்தரித்ததரிதை

தித்தாதிமிதியென தத்தாதளங்குவென்
தத்தோங்கெதத்தையாஜம்ஜெம்ஜேகுணனென (ஆ)

தேவர்மறைவிரிக்க தேசம்புகழுரைக்க
பாவலரெச்சரிக்க பாவங்களையரிக்க

நாதந்தலைதுனிய நாதநடிபடிய
நாரிபாகன்புகழ நான்முகேசன்மகிழ
ஜம்ஜெகுந்ததரி திம்தனுத்தத்திரிதை
தித்தாதளங்குதிமி தித்தாதில்லாணுஜெணு
தத்தோம்தகமிதிதோம்தித்தோம்தாண்டவமென (ஆ)

இராகம்-கேதாரகௌளம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஏழுமலைவாழும் தேவனே ஓம்வெங்கடேசா
வாழ்மலையைவிட்டு இரங்கிவரந்தருகவேணுமே

அநுபல்லவி.

மருமலையைவிட்டு பொன்மலையைவிட்டு
இரங்கிவரந்தருகவேணுமே (ஏழு)

சரணங்கள்.

பாவஜெந்மமெடுத்துப்பிறந்தேனே ஓம்வெங்கடேசா
வைகுந்தவாசாபணிந்தேனுன்பாதம்போற்றினேன்
திருமலைபவவாசா ஓம்ஸ்ரீநிவாசா
பணிந்தேனுந்தன் பாதம்போற்றினேன் (ஏழு)

கோபம்செய்யலாகுமோ என்மேல்ஓம்வெங்கடேசா
லட்சுமிவாசாஎன்குறையை தீர்த்துன்னருள்தாராய்
திருமலையில்வாசா ஓம்ஸ்ரீநிவாசா
குறையைத்தீர்த்துன் னருள்தருவாயே (ஏழு)

கோபம்நீக்கிவாரும்மெய்யனே ஓம்வெங்கடேசா
ஓம்பாபநாசாசுகிர்த கெருடன்மீதிலேறியே

வைகுந்தவாசா திருமங்கைநேசர்
சுகிர்தகெருடன்மீதிலேறி ்ய (ஏழு)

நால்வேதமோத வாரும்நாதனே ஓம்வெங்கடேசா
மெய்த்தாசர்நேசா நேசமாகசரணம்செய்தேனே
திருப்பதியில்வாசா ஓம்ஸ்ரீநிவாசா
நேசமாகசரணம் செய்தேனே (ஏழு)

தாசன்முருகேசன் யேற்றினேன்ஓம்வெங்கடேசா
ஓம்ஸ்ரீநிவாசா தக்ஷணம்இங்குவருகவருகவே
வானவர்நேசா தானவர்நாசா
இக்ஷணம் இங்குவருகவருகவே (ஏழு)

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

பல்லவி.

கோவிந்தமாதவனே ராமா
கோபாலகேசவனே (அரி)

அநுபல்லவி.

மாவிந்தநகர்விட்டு ராமா
வந்திடுவாய் மொழிதந்திடுவாய் அரி (கோ)

சரணங்கள்.

கூனர்குருடரெல்லாம் ராமா
கொண்டானடிக்குமலைவிட்டிரங்காய் அரி (கோ

உன்வரைபொன்வரையே ராமா
ஊழ்வினைநீங்கியருள்பார்க்குமலை அரி (கோ)

நாமமணக்குமலை உன்திருமலை
நாதாந்தப்பேரொலி யானமலை (கோவி)

துளசிமணக்குமலை தனைவிட்டு
துரையேவந்துவிளையாடுவையே-அரி (கோ)
தாசன்முருகேசன் ராமா
தஞ்சமென்றேவா கெஞ்சினனே (அரி)

இராகம்-முகாரி-அடதாளம்.

கண்ணிகள்.

பொல்லாததாடகையைவில்லால்ஜெயித்தீரே ராமச்
கல்லான அகலியைபெண்ணாக்கிவைத்தீரே ராமச்சந்
வேடனுக்குமீளா முத்தியளித்தீரே ராமச்சந்
முடன்கபந்தனுக்குமோக்ஷமளித்தீரே ராமச்சந்
உத்தமசவுரிக்கி சித்திமிகதந்தீரே ராமச்சந்
பத்தினிஜானகிதன் கர்த்தனேதசரத ராமச்சந்
சத்துசித்தானந்த சாயுச்சமளிப்பீரே ராமச்சந்
பத்தன்முருகேசன்மேல்பக்ஷம்வைத்தாளுவாய் ராம

இராகம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வெண்ணையுண்டானே பாலகிருஷ்ணன்
மண்ணையுண்டானே

அநுபல்லவி.

சின்னகோல்கைக்கொண்டு கள்ளனைப்போல்விண்டு
பின்னுமுறிதன்னைப் பின்னமாய்கொய்துமே (வெ)

சரணங்கள்.

சட்டிதயிர்தனை பொட்டனத்திறந்து
கட்டிக்கட்டியாக நெட்டிக்கொண்டான்வேணன்

அக்காசூரன்சிரம் அறுத்துவிட்டையன்
பக்காசூரனைபாழாக்கியே கண்ணன் (வெ)

மட்டிக்கோபிகளும் எட்டன்வேலின்று
கொட்டவேகைதனை சட்டமதாகவே (வெ)

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

மோசஞ்செய்குவதேனோ ஒ அரியே உன்பால் [யே
நேசம்தராமலெனை மோசம்செய்குவதேனோ ஒ அரி

அநுபல்லவி.

ஆசையாயுனையடுத்து நாடினேன்
ஆனந்தமாலே பூசைசெய்துனை
புகழ்ந்துமகிழ்ந் தேனேஎனை —(மோச)

சரணங்கள்.

பஞ்சவர்குறைதீர்க்கவில்லையோ
எனையிப்போது
வஞ்சகம்செய்யலாகுமோ
மாயா நீர் (மோச)

கண்டாகர்னனுக்குமுத்தியளிக்க
வில்லையா ஆதிமூலமே

தொண்டன்மிக தெண்டஞ்செய்து
கூவினேன் எனை
ஈசா அன்பர்களிடம்
வாசா ருக்மணியின்

நேசா கோடிசூரியப்பிர
காசாமுருகேசனே (மோச)

இராகம்-பைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

கண்ணாகமலக் கண்ணா கண்ணா

அநுபல்லவி.

கருதினேனுனை கூவி தாவி கண்ணா

சரணங்கள்.

எந்நாளுந்தொழுதேனே இருகரமும்
சேர்த்துஒருமையாக (கண்ணா)

அந்நாளிலெங்குங் காத்தாய்நல்
அருளே தெருளே ஆயர்பாடி (கண்ணா)

இந்நாளி லிங்கே வாரும் இங்கு
இருப்போர் தமைக்காரும்பாரும் (கண்ணா)

முருகேசன்முறைகேட்டு மொழிவாய்
அருள்தருவாய் வருவாய் (கண்ணா)

பாலன்பிரப்பானம்மே யென்னும் வர்னமெட்டு.

இராகம்-கன்னடா-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஸ்ரீரங்கநாயகனே குளிர்
செங்கஞ்சவாயகனே (ஸ்ரீரங்க)

பாரெங்குப்போற்றமுனை வந்து
பற்றினேன் காவாயெனை (ஸ்ரீரங்க)

நீலமேகக் கோலனே நின்
னேசர்க்கனுகூலனே (ஸ்ரீரங்க)

ஆலிலைமேலைசயனா அரு
ளம்புயனேர் நயனா (ஸ்ரீரங்க)

தங்கமெட்டு-கண்ணிகள்-ஆதிதாளம்.

கஞ்சியில்வாழும்பதி கரிவரதாஉந்தன் துதி
தஞ்சமென்வடைந்தேன் தயாநிதி
தற்காரும் நீயேகதி

ராக்ஷதசங்காரா ராஜர்க்குகெம்பீரா
காக்ஷிதருவா ஈசா செகதீசா
கர்த்தனே கார்சர்வேசா

18C425

பித்தனைப்போலநான் பிதற்றினேனையாவுன்
சித்தமிரங்கிடுவாய் தேவதேவா
சிந்தனையாய் துதித்தேன்

பாலன்முருகேசன் பக்ஷமாய்பாடினேன்
தக்ஷணம்வாருமையா தாமோதரா
தங்ககருடன்மீதில்

முத்துவீராய்மெட்டு-ரூபகதாளம்,

அன்னை தந்தைகுரு தெய்வமும்நீயலால்
ஆதரவுண்டோ ரகுராமா

உன்னைவிடஎனக்குற்றதுணை யார்சொல்
ஓம்நமோ தேவாபரந்தாமா

மாரனையீன்றவா மாதையணிந்தவா
சூரரைவென்ற குணதேவா

பாரினையாண்ட பலராமாவந்னுன்
பாதத்தைதாரும் தினம்ராமா

வாழியெனதினம் வாழ்த்திடுமையா சங்
காழிதரித்த அருள்போதா

ஆழிகடைந்த என்னையனே மெய்யனே
ஆதரித்தாளும் ஹரிராமா

இத்தரைமீதினில் இன்பந்தனைப்பெற
பத்தன்முருகேசன் பாடினனே

சித்தமகிழ்ந்துநீ சேயனைக்காத்திடும்
தேசிகரோதும் திருநாமா

நானா நன்னனே யென்னும் வர்னமெட்டு.

சிந்து.

ஓம்ஓம்நரசிங்கா ஓங்காரநரசிங்கா
உற்றதுணையெனக்கேசற்றே கடைக்கண்பாராய் ஓம்

தெம்மாங்கு.

உன்னைநினைக்கசிங்கா உருகுதேயெந்தனுள்ளம்
மன்னுசோளிங்கம்விட்டு மாதுடனேவாராயோ ஓம்

சிந்து.

எத்தனைநாளாக பத்திசெய்தேனேஉன்
சித்தமிரங்காதோ உத்தமசிங்கதேவா ஓம்

தெம்மாங்கு.

வைப்புபில்லிசூனியமும் வஞ்சகப்பேய்களுமே
கொப்பெனவேயின்னைக்கண்டால் கூவிநடுங்கிடுமே ஓம்

சிந்து.

காத்தான்கறுப்பனுமே சாத்தான்குட்டிமுதாய்
பார்த்தவுடனே இவை காற்றாய்ப்பறந்தோட (ஓம்)

தெம்மாங்கு.

கோரைப்பல்லினொளியும் கோழிமுட்டைகண்ணழ
கும், தாரணியில்சொல்வல்லர் தாசரல்லால்வேறு
[முண்டோ

சிந்து.

இரணியசங்காரா இங்கேவரலொண்ணுதா
தரணியளந்தபாதா தாசன்என்முன்னேவா (ஓம்)

தெம்மாங்கு

தாசன்முருகேசனும் தாவியழைத்தேனையா
பாசமதனைவைத்து பக்ஷமதாய்ரக்ஷிப்பாயே (ஓம்)

சிந்து.

வாவாநரசிங்கா வந்தெனைக்காவாயோ
தேவாஉன்பாதத்தை சிந்தித்தேனர்ச்சித்தேன் (ஓம்)

நன்னானே நானனன்னடி நன்னானே
என்னும், அலங்காரமெட்டு.

கோவிந்தா ஓம் ஹரிஹரி கோவிந்தா பரமானந்தா

பண்டரிநாதா பாண்டவர் தூதா
தண்டனிபாதா தத்துவப்பிரக்கியாதா
இன்னமும்வாதா ஏழையின்மீதா
புண்ணியபோதா பொன்னடிதாதா

ஹரி ஹரியே ஆதரிப்பாயே
முர ஹரியே முகுந்தமதியே

கருணாநிதியே காரும்பதியே
தருணமுறையே திருமால்துரையே (கோ)

கோபிகள்வாசா கோடிப்பிரகாசா
பாபிகள்நாசா பச்சைமாலீசா
பற்குணன்நேசா பக்தர்கள்வாசா
சற்குணர்ஆசா சகமிசர்வேசா
திருஉருவே தினமருவே
அருஉருவே அரிகுருவே
ஆனந்தமாயா அன்பர்சகாயா
கானஞ்செய்வாயா கவலைநேசா (கோ)

ஆராவமுதே ஆரணக்கொழுந்தே
சீராதொழுதே சேவடிபணிந்தே
நாரணமருந்தே நாதத்திலிருந்தே
பூரண அருந்தே போதகவிருந்தே
கருமுகிலே கதியருளே
மறுபொருளே மனமருளே
ஆதியும்நீயே அந்தமும்நீயே
நீதியும்நீயே நேமமும்நீயே (கோ)

கமலக்கண்ணா கார்ப்பாயண்ணா
விமலவண்ணா வேதநண்ணா
பாலகிருஷ்ணா பகவன்கிருஷ்ணா
சீலகிருஷ்ணா துவாரைகிருஷ்ணா
முருகேசன்பாட முத்தமிழில்நாட
தருவேதேட தினமேவோட
உந்தனைப்பணிய உள்ளங்கனிய
மைந்தன்குனிய மாபாவமொழிய (கோ)

காசிநாதா உன்னருளோ-என்னும் வர்னமெட்டு.

ஸ்ரீராகம்-ஆதிதாளம்.

கொண்டல்வண்ணா உன்மாயம்ஒன்றோ
கோடானகோடி கோபியர்துயிலெடுத்
தோடாமல்நின்று ஒளித்தையேசூதா (கொ)

தாடா அம்மாதர் ஆடைகேட்க
தம்மிருகரத்தை சரணமாய்கூப்பி
செம்மையாய்தெண்டஞ்செய்தபின் தந்தாய் (கொ)

தூதுசென்றாயே அங்குஞ்சூதே
குதிரைமகன்றன் குறிகொள்ளவிண்ணில்
இதுபரிவேடம் இதோபாரென்றுரைத்தாய் (கொ)

கன்னிசுதனை செய்தாய்சூதே
கர்ணநீர்செய்த தருமத்தைதாரும்
இங்காழிதானே இதோதாரைவாரும் (கொ)

சிந்துகோனை கொன்றாயேசூதால்
தந்திரமாக சக்கரமனுப்பி
செங்கதிரோனை தெரியாமலமறைத்தாய் (கொ)

ஓடிவருவீர் துவாரைவாசா
வாடியேநின்றேன் வஞ்சனையாகா
நாடினேனுன்னை நான்டமருகேசன் (கொ)

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆதிஅநாதியேவா ஆதிமூலமானதேவா

அநுபல்லவி.

சோதிச்சுடரொளியே சுத்தவெளிசுழிமுனையே

சரணங்கள்.

வேதவெளியுருவே வேதாந்தசின்மயமே
நாதநடுநிலையே நாதாந்தநற்றவமே (ஆதி)
நித்தியநிரஞ்சனமே தத்துவநிராமயமே
சித்திதருந்தவமே தீனஞானமோனநீயே (ஆதி)
தூண்டாமணிவிளக்கே தூரவோர்செழுஞ்சுடரே
வேண்டாமுநிவருண்டோ வேதகீதநாரணனே (ஆதி)
அண்டசராசரமே ஆனந்ததாண்டவமே
தொண்டர்துதியுமே தொழுதேன்முருகேசனுமே(ஆ)

இராகம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

அ-ஆ-அறிவேனுன்றன்ஜாலம் தேவா

அநுபல்லவி.

ஆயர்வீட்டில் நுழைந்து
மாய்கைசெய்த தெல்லாம் (அ-ஆ)

சரணங்கள்.

பச்சைவெண்ணைபரிந்து உண்டீர் அந்த
நச்சுபொய்கைதன்னில் பசுநிசொரூபமானீர் (அ-ஆ)

பஞ்சைபனுதிகள்மேல் கோபம்ஏனோ
தஞ்சமென்றேயழைத்து வஞ்சிதனைக்காத்தீர் (அ-ஆ)

எதிர்த்தஇரணியனைக் கொன்றீர்தேவா
ஏழைமுருகேசன்மேல் ஏனுனக்குத்தாபம் (அ-ஆ)

சாமியுன்னை நாடிவந்தேனெனும் வர்னமெட்டு.

இ-ம்-இந்துஸ்தானி-காபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ராம ராம ராம ராம ராம ராம ராம
ராம ராம ராம ராம ராம பிரமமே (ராம)

ராமதீரராமவீர ராமகோபமே
ராமபாணராமவேத ராமர்பாதமே (ராம)

ராமபத்ரராமநித்திய ராமதத்துவமே
ராமகிதராமவேத ராமசாமியே (ராம)

ராமபக்திராமமுத்தி ராமசித்தியே
ராமசந்ரராமசுந்ர ராமதந்திரமே (ராம)

பூமிபாரந்தீர்க்கவந்த புண்ணியபுருஷனே
சாமியென்றவரக்கனுக்கு சரணளித்தோனே (ராம)

இராகம்-சாமா-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

தேவகி பாலனே
தேன்மொழி வாயனே

ஆவலுட னழைத்தேன்
அரிதுதித்தேன் தினம்மதித்தேன்

ஆதியே பரஞ்சோதியே
பரஞ்சோதியே சோதியே சோதியே

வசுதேவ புத்திரா
வரந்தரு மித்திரா

வாரணங் காத்தவா
வினை தீர்த்தவா பதம்சேர்த்தவா

கண்ணனே மணிவண்ணனே
மணிவண்ணனே வண்ணனே

ஏக பூரணனே
எனையாள் நாரணனே

மோகமதை நீக்கி மொழிதாக்கி
அருள் தேக்கி

மோனமே திருஞானமே
திருஞானமே ஞானமே

சேஷ சயனனே
சேவித்தே னையனே

வாசமலர்ப் பாதா
வரவாதா எந்தன்மீதா

வாருமே கிருபைகாருமே
கண்பாருமே கண்பாருமேபாருமே

அந்தணன் தந்தையே
ஆனந்த மூர்த்தியே

வந்தனஞ் செய்தேனே
சிறியேனே பரியேனே

தந்திரா வெகுசிந்திரா
மிருதந்திரா மிருதந்திரா தந்திரா

வைகுந்த வாசனே
வையம துண்டோனே
வானவர்க ளீசனே
ஜெகதீசனே முருகேசனே
போற்றினேன் யேற்றினேன்
மகிழ்ந்தேற்றினேன் யேற்றினேன்

இராகம்-யமுனைகல்யாணி-அடதாளம்.

பல்லவி.

எந்தனைக் காத்தருளையா
ஓதேவா எந்தனை

அநுபல்லவி.

ஏழைபங்காளனே
ஏனின்னம்வாதே எந்தனை

சரணங்கள்.

வேகவதியோரம் வீற்றிருக்கும்வரதா
நாகமலையனே நமோநாராயணனே எந்தனை

கருடவாகனநாதா க்ருபைதருமேதாதா
திருவளர்மணிமார்பா திருமங்கையின்மணாளா எந்

தாசர்களனுகூலா தாமோதராசீலா
பாசமாய்முருகேசன் பரிந்துனைக்கோறினேன் எந்

இராகம்-லாவணி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

வாரும்பரந்தாமா வரந்தாருமே
ரகுராமா இங்கே வாரும்

காருங் கடைக்கண்ணுற்
கமலவாயாமாயா இங்கே வாரும்

ஜனகராஜன் மருகா
தசரதன்குமாரா இங்கே வாரும்

ஜானகிமணாளா
சற்சனர்குணாளா இங்கே வாரும்

ஆழிகடைந்தோனே
அவுணரைக்கொன்றோனே இங்கேவாரும் வா

அன்னம்பகர்ந்தோனே
அநுமனைக்காத்தோனே இங்கே வாரும்

தாசானுகூலா
தாமதஞ்செய்யாதே இங்கே வாரும்

பராங்குச நாமா
பணிந்தேன் முருகேசனிங்கே வாரும்

சாமிக்கார்போய்சொல்லுவார் என்னும் வர்னமெட்டு.

இ-ம்-இந்துஸ்தானி-காபி-ஆதாளம்.

பல்லவி.

கடைக்கண்பார்மாயனே கலிதீர்ப்பாய்நேயனே

அநுபல்லவி.

திடமுளபொற் கெருடவாகன
ஜெகன்மோகன நாரண கடை

சரணங்கள்.

சக்கரக்கையா சரஸ்வதமெய்யா
இக்கணம் வருகுவீரையா காக்க
இக்கணம்வருகுவீ ரையா
மலர்கையா ஏற்றினேன் கடை

மாதவதேவா மஹாநுபாவா
பாதமதைப் பணிந்தேன் வாவா திரு
பாதமதை பணிந்தேன் வாவா
எனைக்காவா பரம... கடை

என்னிலும்பாவி இருப்பாரோமேவ
பன்னியோனுனைத்தாவி தினம்
பன்னியோனுனைத்தாவி
யுனைக்கூவி பாடினேன் கடை

கோளிலாபடைப்போல்கொம்பிலாகொடிபோல்
தேனில்வீழீப்போல் தியங்கி நான்
தேனில்வீழீப்போல் தியங்கி
மதிமயங்கி திகைக்கிறேன் கடை

தாசர்க்குதாசன் நான்முருகேசன்
பாசமாகவேயுனை துதித்தேன் மனம்
பாசமாகவேயுனை துதித்தேன்
பதம்மதித்தேன் பாரினில் கடை

கெண்டாமணியாடுது யென்னும் வர்னமெட்டு.

இராகம்-அரிகாம்போதி-அடதாளம்.

பல்லவி.

பரமபதவாசனே பரமே ஸ்ரீநிவாசனே பரம

அநுபல்லவி.

கர்மத்தொடர்நாசனேகாக்ஷிதருமீசனே பரம

சரணங்கள்.

முக்குணமாதியே முத்தொழிலனாதியே
முச்சுடர்நீதியே முப்பொருள்சோதியே பரம

வச்சிரபாதனே வைகுந்தநாதனே
உச்சிதவேதனே உத்தம[illegible]னே பரம

உன்ப[illegible]டிட என்மனங்கூடிட
[illegible]னமறைத்தேடிட பத்தர்கள்நாடிட பரம

திருவடிகண்டிட தென்பினைக்கொண்டிட
முருகேசன்கண்டிட முன்வினைவிண்டிட பரம

அரவாபரணனே என்னும் வர்னமெட்டு.

இராகம்-முகாரி-அடதாளம்.

கண்ணிகள்.

அனந்தசயனனே அம்புயநயனனே
அடியேனைக் காருமையா

நானேயுனைநாடி நம்பினேன்மனம்வாடி
நாதனே வாருமையா

தேஜோமயனேவா தெள்ளமுதே நீகாவா
தேவாகண் பாருமையா

ஆதிபராபரமே அனைவர்க்குஞ்சேகரமே
அன்புவைத் தாளுமையா

ஓலமிடபாஞ்சாலிக் குதவியவனுகூலி
உத்தமங் தாருமையா

வேணுகாளனே வேண்டினேன்முருகேசன்
வித்தகா ஆளுமையா

இராகம்-இந்துஸ்தானி-ஏகதாளம்.

பல்லவி.

ஆ-இன்னஞ்ஜாலஞ்செய்வதழகல்ல-மாதவா

அநுபல்லவி.

அதி-அதி-ஆசைகொண்டேன்
ஆவல்தீரும்வாயா ஆ

சரணங்கள்.

அந்தணன்சுரூபமெனை
ஆதரித்தகேசவா

சொந்தமாய் நினைப்பணிந்தேன்
தோன்றலே துரையேவா ஆ

தேசமெங்கும்போற்றிமகிழ்
தென்னரங்க ஆதியே ஆ

தாசன்முருகேசன்புகழ்
தாமரைக்கண்சாமியே ஆ

அங்குநானிருந்தவனை-அழைத்துவந்ததென்னும்
வர்னமெட்டு.

இராகம்-சுருட்டி-தாளம்-ரூபகம்

பல்லவி.

நாராயண ஹரியே நாதாந்தபேரொளியே

அநுபல்லவி.

காராயெனைத்துரையே
காமனை பெற்றயிறையே

சரணங்கள்,

மாதர்வலையில்சிக்கி
மயங்கினேனே நான்சொக்கி

தீருயடனேதக்கி
தினமே திரிந்தேன்போக்கி நாரா

வீணருட னலைந்தேன்
வேதந்தனை துறந்தேன்

காணஉனைமறந்தேன்
கண்ணு விதோபணிந்தேன் நாரா

ஓரெழுத்தோதிலனே
உன்பாதங்காண்கிலேனே

யீரெழுத்தோதிலனே
இன்பசுகமறிகிலேனே நாரா

அண்டபிண்ட மறியேன்
ஆதிஉருவறியேன்

தொண்டன்மிகச்சிறியேன்
தெண்டனிட்டேன்முருகேசன் நாரா

இராகம்-வசந்தம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கருடனேறினர் ரிஷிகேசவன்
ஒய்யாரமான கருடனேறி

சென்னை-600 00
180425
180425

அநுபல்லவி.

நம்பி ஆபரணங்கள்பூட்ட
நாரணன் முடிதனையாட்ட
நாரதர் வீணையைமீட்ட
ரம்பையர் அபினயங்காட்ட (கருட)

இந்திரன்மலர்கொண்டு தூற்ற
இமையவர்சிரம் வணங்கியேற்ற
சந்திரன்தேவா என்றுயேற்ற
சாதுக்களடிபணிந்துசாற்ற (கருட)

வந்தனஞ்செய்தவர்கோடி
வையகத்துதிக்குமேகாடி
சுந்திரமாதர்கள்கூடி
சொகுசுடன்துதிப்போர்தேடி (கருட)

வெண்சாமரம்வீச அன்பர்
வேதகோஷ்டமோத தொண்டர்
பண்பாயிசைபாடதாசர்
பரமனைக்கொண்டாடுவார்நேசர் (கருட)

பகலவன்பார்த்துகொண்டாட
பணிந்தவர்பாவங்கண்டோட
சகலமும்சாமியென்றூட
சங்கரிதமயெனைநாட (கருட)

சந்திரசேகரன் கண்டுகளிக்க
சத்தரிஷிகள் சேர்ந்துமதிக்க

கந்திருவர்கள் விண்டைதுதிக்க
காலில்தண்டையு மிகஜொலிக்க
காதினில்குண்டலமின்ன
கைதனில்சங்குமேதுன்ன
சோதியும்பளபளவென்ன
சத்தியாய் முருகேசன்பன்ன (கருட)

என்னுண்டமாரேஎன்கணவா என்னும்வர்னமெட்டு.

பல்லவி.

கண்ணாஉனைக்காணமலென் கண்கள்தேடுதே ஞான
கண்கள் நாடுதே ஹேகண்ணா

அநுபல்லவி.

எண்ணாத்துயரமதால் ஏங்கினேனுன்னினவால்
கண்ணேகருத்தேவுன்றன் காக்ஷிதாராயோ
என்கவலைதீராயோ

சரணங்கள்.

ஏகாக்ஷரப்பொருளே ஏழையைக்காத்தருளே
பீஜாக்ஷரத்தைநாவில் பொருத்திவைப்பாயே-அதை
நிறுத்திவைப்பாயே ஹே-கண்ணா

சத்துசித்தானவனே சாபத்தைதீர்த்தவனே
சித்தமிரங்கிடுவாய் சித்பிரகாசனே-திரு
பொற்பிரகாசனே ஹே-கண்ணா

தித்திக்கும்தேன்குழலே தேவாவுன்திருவருளோ
பத்தன்முருகேசனிதோ பணிந்துகூப்பினேன்கினேங்
தருகிகூப்பினேன் ஹே-கண்ணா

இராகம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

காலன்பயநமக்கேது நம்
கண்ணனரு ளிருக்கும்போது
புவிமீது எப்போதும்
நெஞ்சே (காலன்)

வாசிதனை கும்பித்துநாட்டினால்
வழிகாணவகாரமதைதீட்டினால்
யோகமாட்டினால் மோன
மூட்டினால்நெஞ்சே (காலன்)

ஞானநிலையறிந்துபோற்றினால்
நடுநாதனவனை மனமேற்றினால்
சினமாற்றினால் சிரங்தேற்றினால்
நெஞ்சே (காலன்)

தாசன்முருகேசன் சொல்நம்பினால்
ஜெகதீசனடியைதினம்நாடினால்
அன்பாய்நாடினால்
அதைப்பாடினால் நெஞ்சே (காலன்)

இங்கிலீஷ்மெட்டு-ஏகதாளம்-கண்ணிகள்.

ஹரி ஹரியே அருமறையே
ஆரமார்பணிக் தருள்பதியே ஓம்ஹரி

தெரியேனையா குரியேனையா
சிரியனிதோமலர்சொரி வேனையா ஓம்ஹரி

உனைப்பிரியேன் உத்தமானுன்
உரகசயனு உன்னடியே ஓம்ஹரி

என்னைக்காராய் அதிதீராய்
மிருநேராய் நீவரந்தாராய் ஓம்ஹரி

சித்தியேவா செல்வமேவா
சேதுபந்த ஸ்ரீராமா ஓம்ஹரி

முத்தியேவா பத்தியேவா
முருகேசன்மொழிந்திடு மொழியேவா ஓம்ஹரி

ஆதரியென்சாமியே என்னும்வர்னமெட்டு.

இராகம்-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

ஈதென்னவுன் மாயமோ
இராகவா என்னேரமோ

அநுபல்லவி.

சூதென்னசெய் தர்மமோ
சோதனையின்வர்மமோ-பரி
காசமென்ன செய்தமோ (ஈதென்)

சரணங்கள்.

கஞ்சமலர்ப்பாதமே காசினியின்வேதமே
தஞ்சமென்றேன்கீதமே சஞ்சந்தீர்நாதமே
அஞ்சலியார் ஈதென்

சிற்சபையில்வாசனே சத்வகுணவீசனே
சர்ச்சனர்கள்நேசனே சந்ததம்பிரகாசனேயிதோ
வந்தனம்உன் தாசனே (ஈதென்)

பாலமுருகேசன்முன்னம்பாதகமென்செய்தேனோ
சீலமுளகேசவா ஸ்ரீயப்பதிகேசவா அரி
நீதியேகெதி ஒடிவா (ஈதென்ன)

இராகம்-ஆதிதாளம்

பல்லவி.

என்னைகைவிடல்மா யீதுனக்குத்தர்மமா

அநுபல்லவி.

அன்னைபோலாதரி ஆதிமூலமேஹரி (என்னை)

சரணங்கள்.

பன்னிருவாழ்வார்க்கு பொன்னடிதந்தராமா
முன்னவனேயொழிய முகுந்தாவாயிரனுமா (என்)

மாமரமெய்தோனே மானின்பின்னடந்தோனே
தாரதலம்புகழ்வோனே தாசர்கள்மகிழ்வோனே (என்)

திருவடிதந்தோனே தேசத்தையளித்தோனே
முருகேசன்மதித்தேனே முன்வினைவிடுத்தேனே (எ)

இராகம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி.

வந்தாரேவெங்கடேசர் வாழும்மலையைவிட்டு

அநுபல்லவி.

துளசிமணிகள்மின்ன ஜோதிபளபளென்ன
களபகஸ்தூரிதுன்ன கண்ணன்வனுமநேறி (வந்)

சரணங்கள்.

மறையவர்கள்துதிக்க மானிலங்கள்செழிக்க
குறைகள்யாவும்விலக்க கோறினவரைக்காக்க

காதில்குண்டலமாட கண்டதாசர்கொண்டாட
ஆதிவைகுந்தம்நாட அமரர்கள்வங்குந்தேட
காலகாலன்கண்கூச கவுத்துவமொளிவீச
பாலன்முருகேசன்பேச மாயன்கருடனேறி

இராகம்-காம்போதி-அடதாளம்.

பல்லவி.

திருமலைவாசனை திவ்வியப்பிரகாசனை
தெரிசித்துக்கொண்டேனே

அநுபல்லவி.

கருநீலமேனியானை கவுசல்லியாபுத்திரனை
கருத்தினில்திருத்தமாய் கண்ணின்வெளியொழில்

சரணங்கள்.

கோவைச்செவ்வாயனை கோசலைசேயனை
பாவைசீதைநாதனை பன்னகசயனனை

வெண்ணையுண்டநாதனை மண்ணையுண்டபோதனை
நன்னவேபுண்ணியங்கள் நானென்னசெய்தேனோ

தேசிகரோதுகின்ற திருவாய்மொழியோனை
கோசிகன்முதலோர்கள் கோறினபாதனை (திரு)

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கண்ணனைக்கண்டேன் என்
கவலையைவிண்டேன்

அநுபல்லவி.

வண்ணமாகவெண்ணையுண்டவாயனை
அன்பர்நேயனை (கண்)

சரணங்கள்.

அக்குரூர்க்குசர்க்குருவாய் ஆனந்திக்கசெய்தவனை
பற்குணன்றன்பாலனுக்கு விற்குருவாய்நின்றதேவா

சகடரூபராக்ஷதனை சங்காரஞ்செய்தவனை
கபடம்செய்தகம்சனையே காலனிடம்சேர்த்ததேவா

சந்தணந்தரதிருவிக்கிரை தானேசுகந்தந்தவனை
மைந்தன்முருகேசன்தொழும் மாதவனைசீதரனை (க)

இராகம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

பல்லவி.

என்னபுண்ணியஞ்செய்தேன்
இறைவனையான்காண
எந்தன்பாக்யமேபாக்கியம் (என்ன)

அநுபல்லவி.

நன்னயமாகவென்னுவினிலழைத்தேனோ
நாதாந்தவேதாந்தநாராயணனைக்காண (என்ன)

சரணங்கள்.

கோவில்குளங்கள்கட்டி கோகுலனை
கோறியிருந்தேனோ கெட்டி
ஆவினங்களுக்கு அன்பாய்புல்கொடுத்தேனோ
தாவிமுன்ஜன்மத்தில் தலங்களில்திரிந்தேனோ

கன்னியாகுமரிதன்னில் கருத்துடன்
களித்துமுழுகிநதியில்
பன்னகசயனனை பரமபுருஷனை
இன்னிலந்துதிக்கவே எடுத்துரைசெய்தேனே

தாசர்களடிபணிந்து சதாகாலம்
தேசிகர்தமைத்தொழுது
பாசமுடனேஅரி பஜனைபுரிந்தேனே
ஈசன்அயன்றைபுரி தாசன்முருகேசன் (என்)

இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

ஐயனைக்கண்டேனே அவனருள்
ஆனந்தங்கொண்டேனே

அநுபல்லவி.

பைரவின்மீது பள்ளிகொள்ளும்ரங்கனை
வெய்யவன்குலந்தனில் விளங்கியதுங்கனை (ஐய)

சரணங்கள்.

சங்குசக்கரகையன்
சாரங்கமேந்துமெய்யன்
பங்கயக்கண்ணனவன்
பரந்தாமனுகவந்த (ஐய)

ஏகஉருவமான
ஏழைதயாபரனை
ஆகமங்கள்தொழும்
ஆழிவண்ணனைமாய (ஐய)

சாலோகசாமீப
சாரூபசாயுச்ய
நாலாம்பதவிதரும்
நாதனைமுருகேசன் (ஐய)

இராகம்-சாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

மங்களம் மங்களம் மங்களம்
அரிவாசுதேவனுக்கு (மங்)

அநுபல்லவி.

மண்ணளந்தபாதனுக்கும்
விண்ணளந்தநாதனுக்கும்
புண்ணியமுதல்வனுக்கும்
பொன்னரங்கதேவனுக்கும் (மங்)

சரணங்கள்.

கோபியர்உல்லாசனுக்கும்
கோவிந்தசாமிக்கும்
பாபியர்சம்மாரனுக்கும்
பச்சைவன்னமேனியர்க்கும்
தேவலட்சுமிவாசனுக்கும்
தேவகிதன்மைந்தனுக்கும்
ஆவினத்தைக்காத்தவர்க்கும்
ஐயன்பரந்தாமனுக்கும் (மங்)

கோவர்த்தனகிரிதனை
குடையாயெடுத்தவர்க்கும்

கோபாலர் தம்முடனே
கூடித்திரிந்தவர்க்கும்
பூபாலர் அயனறிவாய்
புனிதரானவருக்கும்
நாமாபதுமமலர்த்
தாளாரானவருக்கும்ஜெய (மங்)

உத்தமர்க்குதத்துவத்தை
மொத்தமாய்மொழிந்தவர்க்கும்
பத்தன்முருகேசனுக்கும்
சித்தப்பிரகாசனுக்கும்
சத்தியத்தைதந்தவர்க்கும்
சங்கரனைக்காத்தவர்க்கும்
நித்தியநிரஞ்சனர்க்கும்
நீலமேகவண்ணனுக்கும் (மங்)

தில்லாலேமெட்டு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

நித்தியகல்யாணனுக்கும் நீலமேகவண்ணனுக்கும்
பத்தரிடர்தீர்த்தோனுக்கு பரமபுருஷோத்மனுக்கும்
மங்களம்ஜெயமங்களம் சுபமங்களம்

அண்டமளந்தவர்க்கும் ஆனந்தத்தாண்டவர்க்கும்
பண்டரிநாதனுக்கும் பாண்டவர்சகாயனுக்கும்
மங்களம்ஜெயமங்களம் சுபமங்களம்

முத்தியளிப்பவர்க்கும் மூவுருவானவர்க்கும்
சித்திதருபவர்க்கும் ஸ்ரீவாசுதேவனுக்கும்
மங்களம்ஜெயமங்களம் சுபமங்களம்

மகுடமணிந்தவர்க்கும் மாயாவினோதனுக்கும்
சகடமுதைத்தவர்க்கும் சம்பன்னனுக்கும்
மங்களம்ஜெயமங்களம் சுபமங்களம்

கோசலைபாலனுக்கும் கோபியர்லீலனுக்கும்
தேசமகிழ்சீலனுக்கும் தேவரனுகூலனுக்கும்
மங்களம்ஜெயமங்களம் சுபமங்களம்

கேசவநாமனுக்கும் கோதண்டராமனுக்கும்
தாசன்முருகேசனுக்கும் ஜானகிஉல்லாசனுக்கும்
மங்களம்ஜெயமங்களம் சுபமங்களம

எச்சரிக்கை-திரிபுடைதாளம்.

ஹரிஓம் நமோதேவா
அருளாளானையாளாய்
சிரியேனென்றுந்
தெரியேனே செவ்வாயா

மானாய்வந்த மாரீசனை
மடித்தாய்பாதங் கொடுத்தாய்
தானாய் வந்த
தாடகையை தரித்தாய்

பஞ்சவர்கள் தாதா
  பிறக்கியாதா நவனீதா
தஞ்ச மென்றேன்
  தாமோதரா தாசன்

வானோர்தொழும் வாசுதேவா
  வரமளிக்க வாவா
நானே முருகேசன்
  தினம்நாடினேன்.

ஆஞ்சநேயர் கீர்த்தனை

முற்றிற்று.